**கவனிக்க.**-2023.08.25 ஆந் திகதிய 2347 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.**-இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2023 ஆம் ஆண்டுக்கான குருநாகல் மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2348 - 2023 සැප්තැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2023.09.01
2348 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 250 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

249 - B 082490- 353 (2023/09)

# நானாவித அறிவித்தல்கள்

**(விதி 7) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்**
**(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் ( கொழும்பில் அமைந்துள்ளது)**

வழக்கு இலக்கம்: CHC/ CIVIL/ 48/ 2023/ CO
தன்மை: ஒடுக்குதல்

இல. 1035, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல (PV 1422) கம்பனிப் பதிவு இலக்கமுடைய HYUNDAI LANKA (PRIVATE) LIMITED விடயத்தில், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்குவதற்கான விண்ணப்பம்.

கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ.,
இல.21, சேர். ராசிக் பரீட் மாவத்தையில் அமைந்துள்ளதும், இல. 213, கடுவல வீதி, பத்தரமுல்லையில் “ பத்தரமுல்லை கிளை” எனும் பெயரில் அறியப்படும் மற்றும் அழைக்கப்படும் கிளையை அல்லது அத்துடன் வியாபாரத்தளத்தை கொண்டது.

மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை ( கொழும்பில் அமையப்பெற்ற குடியியல் நியாயாதிக்கம் கொண்ட) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான மனு, 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதியன்று இல. 21, சேர் ராஷிக் பரீட் மாவத்தையில் அமையப்பெற்ற கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இனால், குறித்த நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதென அறிவித்தல் வழங்கப்படுகின்றது. குறித்த மனுவானது 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்துக்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதென்றும், மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்புவாராயின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அக்காரணத்திற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோன்றலாம் எனவும், மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்கு தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி அதற்கென அறவிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தி கீழ் காட்டப்பட்டுள்ளவரின் கையொப்பமிட்டவரின் கையொப்பத்துடன் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

முகம்மட் கலீல் முகம்மட் இர்சாட்,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 180,பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு -04.

**குறிப்பு**: மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வதாயின் அவர்/அதன் நோக்கத்தை அறிவித்தல் மூலம் எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான முகம்மட் கலீல் முகம்மட் இர்சாட் அவர்களுக்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின், பெயர்கள் மற்றும் முகவரிகள் அல்லது நிறுவனமாக இருப்பின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி அல்லது அவரின்/அதன் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றை குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதிய கால அவகாசத்துடன் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி பி.ப. 6.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

முகம்மட் கலீல் முகம்மட் இர்சாட்,
மனுதாரரின் சட்டத்தரணி.

09- 76

## இன்ஜினியர்ஸ் கில்ட் ஸ்ரீ லங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

உதய கம்மன்பில ஆகிய நான், இலங்கைச் சனநாய சோசலிசக் குடியரசின் பாரளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இன்ஜினியர்ஸ் கில்ட் ஒப் ஸ்ரீ லங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் " எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) இலங்கையிலுள்ள பயிற்சி பெற்ற தகைமையுடைய அனைத்து பொறியியலாளர்களையும் உள்ளடக்கிய தேசிய சபையொன்றினை தாபித்தல்,

(ஆ) தேசிய பொருளாதாரம் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக சகல மட்டத்தினையும் சார்ந்த அனைத்து தொழில்சார் நிபுணர்களுக்கும் வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல் மூலம் சிவில் சமூகத்தின் மேம்பாட்டுக்கும் நலினமான ஆட்சிக்கும் பங்களிப்புச் செய்தல், மற்றும்

(இ) நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்துவரும் தொழில்நுட்பத்திற்கு சமாந்திரமாக அவர்களது அறிவு மற்றும் திறமைகளை வளர்த்துக்கொள்ளத்தக்க பொறியியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அதையொத்த துறையினர்களின் உதவியை பெற்றுக்கொள்ளல்,

பிறவும்.

உதய கம்மன்பில,
பாராளுமன்ற உறுப்பினர்.

09- 98

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2023**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 01.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2023 |
| | | வெள்ளி | 08.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2022 |
| | | வெள்ளி | 15.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.09.2023 |
| | | வெள்ளி | 22.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2023 |
| | | புதன் | 27.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2023 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 06.10.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.09.2023 |
| | | வெள்ளி | 13.10.2023 | .. | நண்பகல் 12 | புதன் | 27.09.2023 |
| | | வெள்ளி | 20.10.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.10.2023 |
| | | வெள்ளி | 27.10.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.10.2023 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 03.11.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.10.2023 |
| | | வெள்ளி | 10.11.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.10.2023 |
| | | வெள்ளி | 17.11.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.11.2023 |
| | | வெள்ளி | 24.11.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.11.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.